**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**FAST TRACK COURT, ERANIEL**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )
**CC.No. 45/2022 D.W. 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ஸ்ரீநாத் (Bank Manger, Federal Bank, Eraniel Branch)** | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. ரமேஷ் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 12.05.2026.**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு முதல் விசாரணை**

1. நான் இரணியல் கிளை பெடரல் வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் இருந்து சந்திரிகா அஜயன் என்பவரின் Joint Account No.16400100067887 என்ற வங்கிக் கணக்கின் அனைத்து ஆவணங்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் படி எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் நான் இன்று ஆஜராகி மேற்படி வங்கிக் கணக்கிற்குரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன்.

2. True copy of Account Opening Application of both members along with copy of aadhar card ஆகியவற்றை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். அந்த **ஆவணம் Ex.D1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி வங்கிக் கணக்கானது Joint Account ஆகும். அது 10.08.2022 தேதியன்று தொடங்கப்பட்டது ஆகும்.

3. அதில் மொத்தம் 3 ஆயிரம் ரூபாய் 10.08.2022ம் தேதியன்று செலுத்தப்பட்டிருந்தது. அதில் ATM Card மூலம் 22.08.2022 மற்றும் 28.08.2022 ஆகிய தேதிகளில் தலா ஆயிரம் எடுக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு அதில் எந்த பரிவர்த்தனையும் இல்லை. மேலும் அந்த வங்கிக் கணக்கில் காசோலை எண் 10159626 என்ற காசோலை 12.08.2022 தேதியன்று பணம் எடுக்க தாக்கல் செய்யப்பட்டு அது போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டுள்ளது. அதற்குரிய Account

Statement–யை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். **அந்த ஆவணம் Ex.D2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.